
# பெரியார் ஏற்றிய பகுத்தறிவுச் சுடர், தலைமுறைகள் கடந்து ஒளிரட்டும் !

## 148- ஆவது பிறந்தநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



சென்னை, செப்.18-

தந்தை பெரியார் அவர்களின் 148- ஆவது பிறந்தநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் “பெரியார் ஏற்றிய பகுத்தறிவுச் சுடர், தலைமுறைகள் கடந்து ஒளிரட்டும்” என்று புகழாரம் சூட்டி பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**தமிழர் தலைமுறை தலைநிமிரப் பாடுபட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாருக்குப் புரட்சி வணக்கம்!**

**பல தலைமுறைகள் ஆதிக்கத்துக்குப் பணிந்தன.**

**ஒரு தலைமுறை பெரியார் நிகழ்த்திய புரட்சியைக் கண்டது.**

**பல தலைமுறைகள் அதன் மாற்றத்தைக் காண்கின்றன.**

**ஆனாலும், ஆதிக்கம் இன்னும் முற்றாக அகலவில்லை. அதனை அடையாளம் காண வேண்டியது வரும் தலைமுறைகளின் பொறுப்பும்கூட!**

**வெளிச்சமற்ற இடம் இருள்; கேள்விகளற்ற சமூகம் அதைவிடப் பேரிருள்.**

**“ஏன்? எதற்கு? எப்படி?” என்ற கேள்விகள் உயிரோடு இருக்கும் வரை, இருள் நம்மை அண்டாது.**

**பெரியார் ஏற்றிய பகுத்தறிவுச் சுடர், தலைமுறைகள் கடந்து ஒளிரட்டும்!**

**#சமூகநீதிநாள் #SocialJusticeDay #PeriyarForever**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### எக்காலத்துக்கும் பொருந்தும் பெரியாரின் கொள்கைகளை


# அடுத்த தலைமுறை இளைஞர்களிடம் அதிகமாகக் கொண்டு சேர்ப்போம்!

## தந்தை பெரியார் பிறந்த நாளில் – உதயநிதி ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, செப். 18-**

**தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளையொட்டி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்த வலைதளப் பதிவொன்றில், “எக்காலத்துக்கும் பொருந்தும் பெரியாரின் கொள்கைகளை அடுத்த தலைமுறை இளைஞர்களிடம் அதிகமாகக் கொண்டு சேர்ப்போம்!” என்று சூளுரைத்துள்ளார்.**

அவர் விடுத்துள்ள வலைதளப் பதிவு வருமாறு:-



ஈராயிரம் ஆண்டு இருளுக்கு எதிராக அறிவுத் தீப்பந்தம் ஏந்திய பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள் இன்று!

‘மானமும் – அறிவும் மனிதர்க்கு அழகு. சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு’ என்று முழங்கிய தந்தை பெரியாரின் பிறந்த நாளை, தலைவர் @mkstalin அவர்கள் தலைமையிலான கழக அரசு #சமூகநீதி நாளாக அறிவித்தது.

திராவிட இயக்கத்தின் அடித்தளமும் - அடையாளமுமாக திகழும் தந்தை பெரியாரின் பணிகளை இன்னும் வேகமாக முன்னெடுப்போம்.

எக்காலத்துக்கும் பொருந்தும் பெரியாரின் கொள்கைகளை அடுத்த தலைமுறை இளைஞர்களிடம் அதிகமாக கொண்டு சேர்ப்போம். தமிழ்நாட்டின் முற்போக்கு முகத்தை நிலைநாட்டுவோம்.

**வாழ்க பெரியார்!**

**ஓங்கட்டும் அவர் புகழ்!!**

இவ்வாறு அப்பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதோடு பாதுகாப்பு குறித்து எவ்விதப் புரிதலுமின்றி

# பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் அமைக்கத் திட்டமா?

## சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.சந்துரு எதிர்ப்பு!

**சென்னை, செப். 18 -**

**மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்பதால், சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச்செயலகம் கட்டும் பணியை முதலமைச்சர் விஜய் கைவிடவேண்டும் என, உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சந்துரு தெரிவித்துள்ளார்.**



(சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சந்துரு ஆங்கில நாளிதழ் ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையில், செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள தற்போதைய தலைமைச் செயலகம் இடநெருக்கடி மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் நிறைந்ததாக மாறியுள்ளது என்பதை யாரும் மறுக்கவில்லை என்றாலும், கல்வி நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் நிறைந்த, குறுகிய மற்றும் நெரிசலான சாந்தோம் நெடுஞ்சாலைப் பகுதியில் புதிய தலைமைச்செயலக வளாகத்தைத் திட்டமிடுவது கடுமையான கவலைகளை எழுப்புவதாக கூறியுள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு பிரதமர் மோடி சீன அதிபர் ஜி ஜின்பிங்கை மகாபலிபுரத்தில் சந்திக்க விரும்பிய போது, அவர்கள் இருவரையும் கோவளம் அருகே உள்ள ஒரு நட்சத்திர விடுதியில் தங்க வைக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால், அந்த விடுதி கடற்கரைக்கு மிக அருகில் இருந்ததாலும், எதிரி நாட்டுப் போர்க்கப்பல்களால் எளிதில் தாக்கப்படக்கூடிய நிலையில் இருந்ததாலும், சீனப் பாதுகாப்பு நிபுணர்கள் அந்த இடத்திற்கு ஒப்புதல் அளிக்க மறுத்துவிட்டனர். எனவே, சீன அதிபர் கிண்டியில் அமைந்துள்ள ஒரு விடுதியில் தங்கி அந்தச் சந்திப்பில் பங்கேற்றார். ஒரு வெளிநாட்டுத் தலைவருக்கு இத்தகைய பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்த நிலையில், பாதுகாப்பு குறித்த எந்தவிதமான புரிதலும் இன்றி, ஒட்டுமொத்த தமிழ்நாடு மாநிலத்தின் தலைமைச் செயலகத்தை கடற்கரையிலிருந்து 500 மீட்டர் தொலைவிற்குள் அமைக்கத் தற்போதைய அரசு ஏன் திட்டமிடுகிறது? என்று முன்னாள் நீதிபதி சந்துரு கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், புதிய தலைமைச்செயலகம் அமையவுள்ள பட்டினப்பாக்க வளாகத்தை அடைய மாற்றுச் சாலை இல்லாத நிலையில், அங்கு கூடுதல் போக்குவரத்துச் சுமை உருவாகும் என்றும் தலைமைச் செயலகம் மற்றும் சட்டமன்றம் இங்கு அமைக்கப்பட்டால், நிரந்தர ஊழியர்கள், துணைப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் என நாளொன்றுக்கு ஒரு லட்சம் பேர் இங்கு வருவார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பட்டினப்பாக்கத்துக்கு அருகிலுள்ள உள்ள மந்தைவெளி ரயில் நிலையம் ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவிலும், அடையாறில் அமையவுள்ள மெட்ரோ ரயில் நிலையம் 2 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளன. வடக்கையும் தெற்கையும் இணைக்கும் ஒரே சாலையான சாந்தோம் நெடுஞ்சாலையில் பேருந்து வழித்தடங்களை அதிகரிப்பதற்கான வாய்ப்பு இல்லை. எனவே, ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் போதுமான போக்குவரத்து வசதிகளைச் செய்து தராமல், வெறும் அலுவலக வளாகத்தை மட்டும் அமைப்பது ஒரு தீர்வாகாது என்று நீதிபதி சந்துரு தெரிவித்துள்ளார்.

மேலும், சீற்றத்துடன் கூடிய கடல் நீர் நிலப்பகுதிக்குள் 2 முதல் 3 கிலோ மீட்டர் வரை ஊடுருவிய 2004 ஆம் ஆண்டு சுனாமியை யாரும் மறக்க முடியாது. அப்போது புதிய தலைமைச்செயலகம் அமையவுள்ள தற்போதைய இடம் முழுமையாகத் தனிமைப்பட்டு வெள்ளத்தில் மூழ்கியது, நீர் மட்டம் மந்தைவெளி பேருந்து நிலையம் வரை உயர்ந்ததால், அப்பகுதியை மீனவர்களின் படகுகள் மூலம் மட்டுமே அணுகக்கூடிய நிலை ஏற்பட்டது. இதேபோன்று, ஶ்ரீனிவாச புரத்தில் முழு குடியிருப்பும் அடித்துச் செல்லப்பட்டதால், அது மீண்டும் கட்டப்பட வேண்டிய சூழல் உருவானது. எனவே, கடற்கரைக்கு அருகில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திட்டமிடலிலும் இயற்கையின் சீற்றத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே, சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச்செயலகம் கட்டும் பணியை முதலமைச்சர் விஜய் கைவிடவேண்டும் என, உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சந்துரு தெரிவித்துள்ளார்.

### ‘மிசா’ தொடர்பாக முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் குறித்து அவதூறு!

# அமைச்சர் நிர்மல் குமார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் !

## டி.ஜி.பி. அலுவலகத்தில் திருச்சி சிவா எம்.பி., புகார்!

**சென்னை, செப்.18-**

**மிசா தொடர்பாக முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் குறித்து அவதூறாக கருத்து தெரிவித்த அமைச்சர் நிர்மல் குமார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தி.மு.க. சார்பில் மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா, டி.ஜி.பி. அலுவலகத்தில் நேற்று முன்தினம் புகார் மனு அளித்தார்.**



பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

1976 ஜனவரி 30ல் மகாத்மா காந்தியின் நினைவு நாளில், அன்றைய ஆளுநர் கே.கே.ஷா தமிழகத்தில் காந்தி வழியில் ஆட்சி நடக்கிறது என்று பேசினார். அடுத்த நாள் 31ம் தேதி சட்டம் – ஒழுங்கு கெட்டு போனது என்று கையெழுத்திட்டு திமுக ஆட்சி கலைக்கப்பட்டது. கலைக்கப்பட்ட அன்று இரவில் தொடங்கி தமிழகம் முழுவதிலும் இருந்த தி.மு.க. முன்னணி நிர்வாகிகள் மிசாவில் கைது செய்யப்பட்டார்கள். மு.க.ஸ்டாலினும் கைது செய்யப்பட்டார்.

சிறையில் உள்ள வார்டன்களும், வார்டன் அல்லாதவர்களும் ஒவ்வொரு அறையாக திறந்து உள்ளே இருந்தவர்களை அடித்து உதைத்து பலத்த காயத்தை ஏற்படுத்துகிறார்கள். அப்போது மு.க.ஸ்டாலின் இருந்த அறைக்கு வந்து தாக்குகிற போது, அன்றைய நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சிட்டிபாபு, மு.க.ஸ்டாலின் மீது விழுந்த அடியை பார்த்து குறுக்கே விழுந்து அந்த அடிகளை தாங்கினார். அப்போது பூட்ஸ் கால்களால் அவரது அடி வயிற்றில் மிதித்து தாக்கிய போது, சிறுநீரகம் பாதிக்கப்பட்டு அதன் பிறகு சிறையிலேயே மாண்டு போனது வரலாறு. மு.க.ஸ்டாலின் ஓராண்டு முழுவதும் சென்னை சிறையில் தான் இருந்தார். அடிபட்டவர்களின் பட்டியல் நீண்ட பட்டியல். திராவிட கழக தலைவர் வீரமணியில் தொடங்கி பலர். தி.மு.க. மூத்த தலைவர் ஆற்காடு வீராசாமியின் காது செவுடானது அப்போது தான். முன்னோடிகள் பலர் அடிபட்டார்கள். சிட்டி பாபு இறந்தார். பின்னர் சாத்தூர் பாலகிருஷ்ணன் இறந்தார். இவ்வளவும் வரலாறு.

ஆனால் இன்று தமிழகத்தில் ஆட்சி பொறுப்பில் இருக்கிறவர்கள், ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடாமல், மக்கள் பிரச்சினைகள் பற்றி பேசாமல், திமுக மீது பழி சுமத்துவதிலும், அவர்கள் மீது ஏதையாவது சித்தரிப்பதிலும் வேலையாக வைத்துள்ளனர். அதிலும் குறிப்பாக சட்டத்துறை அமைச்சரான நிர்மல்குமார் மதுரையில் பத்திரிகையாளர்களை சந்திக்கிற போது, மு.க.ஸ்டாலின் மிசாவில் கைதாகவில்லை. அதற்கான சான்றுகள் இல்லை என்று கூறுகிறார்.

அவசர நிலை காலம் என்பது ஜனநாயகத்திற்கு எதிரான நடந்த பேராட்டமாகும். யாருடைய தியாகத்தையும் கொச்சைப்படுத்தக் கூடாது. அரசியல் பேசலாம். விமர்ச்சனங்கள் வைக்கலாம். ஆனால் எல்லைக்குள் நின்று தான் வைக்க வேண்டும். பதவியில் இருப்பவர்கள் கொஞ்சம் பொறுப்புணர்வோடு பேச வேண்டும். நான் நாடாளுமன்ற மாநிலங்களவையின் தி.மு.க. தலைவராக இருக்கிறேன். என் கட்சி தலைவரின் தியாகத்தை சில பேர் உதாசினப்படுத்தப்படுகிற போது, தி.மு.க. தொண்டர்கள் வேதனைப்படுத்தப்படுகிற போது, அதில் இருந்து கட்டுக்கோப்பாக காக்கப்படுகிறது. அதே நேரத்தில் இதை நடைமுறைப்படுத்தி செயல்படுத்த கூடிய பொறுப்பு சட்டம் ஒழுங்கு பாதுகாக்க கூடியது அரசாங்கத்திடம் இருக்கிறது. இதுகுறித்து டி.ஜி.பி.யிடம் முறையிட்டுள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

### பொருளியல் அறிஞர்

# பேராசிரியர் வேதகிரி சண்முக சுந்தரனார் நூற்றாண்டு விழா!

## சென்னையில் சிறப்பாக நடைபெற்றது!

*சென்னை, செப். 18 -*

நூறாண்டு தாண்டும் பேற்றினைப் பெற்றவர் பேராசிரியர் வேதகிரி சண்முக சுந்தரனார் உலகம் அறிந்த பொருளியல் அறிஞர். இவர்! சென்னைப் பல்கலைக்கழகப் பொருளியல் துறைத் தலைவராக முப்பது ஆண்டுகள் தொடர்ந்து விளங்கியவர். பொருளியல் ஆராய்ச்சியில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு வழிகாட்டியவர். இவரிடம் பச்சையப்பன் கல்லூரியில் பயின்ற மாணவர்களுள் முத்தான மாணவர் முரசொலி மாறன் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் பட்டம் பெற்ற அறிவாளர் சண்முகசுந்தரனார். தமிழ்நாடு திட்டக் குழு உறுப்பினராகப் பல ஆண்டுகள் திகழ்ந்தவர் மனோன்மணியம். சுந்தரனார் பல்கலைக்கழக முதல் துணை வேந்தராகப் பொறுப்பேற்றவர்.

இவருடைய துணைவியார் சென்னை எத்திராசு மகளிர் கல்லூரி. முதல்வராகவும் அன்னை தெரசா பல்கலைக்கழகத் துணை வேந்தராகவும் இருந்தவர் 16.09.2026ஆம் நாள் நூறு ஆண்டுகள் நிறைந்த இவருக்குச் சென்னை வைணவர் கல்லூரியில் நூற்றாண்டு விழாக் குழுவின் சார்பில் விழா நடைபெற்றது.

அரசியல் தலைவர்களும் அறிஞர்களும் கல்வியாளர்களும் மாணவர்களும் விழாவில் கலந்துகொண்டு மகிழ்ந்து வாழ்த்தினர் .

விழா மலர் ஒன்று வெளியிடப்பட்டது.விழா ஏற்பாடுகளை இவருடைய மாணவர் பல்கலைக்கழக மேனாள் பதிவாளர் பேராசிரியர் ஏ.ஆர்.வீரமணி சிறப்புறச் செய்திருந்தார்.



மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் யசோதா சண்முகசுந்தரம் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய The Centinarian Prof.Vedagiri Shanmugasundaram என்னும் வாழ்க்கை வரலாற்று நூலைப் பேராசிரியர் வேதகிரி சண்முக சுந்தரனார் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர் பேரவை மேனாள் தலைவர் மா.செல்வராசன் அவர்களின் இல்லத்தில் வழங்கினார். உடன் பச்சையப்பன் கல்லூரி மேனாள் முதல்வர் முனைவர் பா.கந்தசாமி முனைவர் திருமதி யசோதா சண்முகசுந்தரம் மாநிலக் கல்லூரி மேனாள் தமிழ்ப் பேராசிரியர் பா.உதயகுமார் மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் சீமன் நாராயணன் ஆகியோர் உள்ளனர்.



இந்திய பத்திரிகையாளர் சங்க தேசியக்குழு உறுப்பினரும் டி.பி.பி.ஓ. தொ.மு.ச. அகில இந்திய பொருளாளருமான லயன் டி.தேவராஜ் புதல்வி டி. ஜெயஸ்ரீ – ஆர்.யோகராஜ் (எ) அஜய் ஆகியோரது மணவிழா பழைய வண்ணாரப்பேட்டை மரகதம் திருமண மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் பொதுக்குழு உறுப்பினர் சிவக்குமார் (எ) சிவா, வட்டச் செயலாளர் கலைச்செல்வன், ஐ.சி.எஃப், பழனி மற்றும் பலர் உள்ளனர்.